செய்தி வெளியீடு எண்: 594 நாள்: 30.08.2018

## செய்தி வெளியீடு

அண்மையில் கேரளாவில் பெய்த வரலாறு காணாத மழை காரணமாக அங்குள்ள நூற்றுக்கணக்கான இடங்கள் நீரில் மூழ்கின. மேலும் பொதுமக்கள் சொல்லொனா துயரத்தில் ஆளாகியுள்ளனர். கேரளா மாநிலம் அதன் இயல்பு நிலைக்கு விரைந்து திரும்ப வேண்டும் என்றும் கேரளா மாநிலத்துடனான வணிக ரீதியிலான நடவடிக்கைகள் தொடரவேண்டியும், அம்மாநிலத்திற்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிவாரணப்பொருட்களாக போர்வை, பாய், ஆடை வகைகள், பற்பசை , சோப்பு மற்றும் சலவை பவுடர் போன்ற ரூ.30 இலட்சம் பெறுமானமுள்ள அத்தியாவசிய பொருட்கள் வணிகவரித்துறையின் மூலமாக கேரளாவுக்கு அனுப்பி வைக்க ஆவண செய்யப்பட்டுள்ளது.

இன்று 30.08.2018 பிற்பகல் 2.00 மணியளவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் தலைமையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை முதன்மைச் செயலாளர் திரு.கா.பாலசந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கூடுதல் தலைமைச் செயலர்/ வணிகவரித்துறை ஆணையர் திரு.டி.வி.சோமநாதன்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மேற்கண்ட நிவாரணப்பொருட்கள் இரண்டு லாரிகளில் கேரள மாநிலம், எர்ணாகுளம் / ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள நிவாரண முகாம்களுக்கு கொடியசைத்து அனுப்பிவைக்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**